உதாரணம் - கடல்வளம், வளவளம், மேச்சல் நிலம் (2 புள்ளி)

II) வருமான வரி 17%

பெறுமதி சேர்வரி 23%

கலால் வரி 21%

இறக்குமதி வரி 7%

ஏனைய வரிகள் 20% (5 புள்ளி)

III) பொதுப்பண்டங்கள் சேவைகளை வழங்குதல்

வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துதல்

பொருளாதார உறுதிநிலை பேணல்

கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்தல்

சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டல் (5 புள்ளி)

IV)




சந்தை முறை தனியார் செலவு தனியார் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு வெளியீட்டை மேற்கொள்கின்றது வெளிவாரி செலவு உள்ள நிலையில் சந்தை முறைமை மிகை உற்பத்தி மிகைவளப் பயன்பாடு என்பவற்றைக் கொண்டிருப்பதால் சந்தை முறை வளர்பகிர்வும் செயற்றிறன் கொண்டிருப்பதில்லை. வளப்பகிர்வுச் செயற்றின் கொண்ட வெளியீட்டு மட்டமாகும். (2 புள்ளி)

V) மீள் சுழற்சி முறை

வரிகளை விதித்தல்

நல்வழி ஆலோசனை

(2 புள்ளி)

08. அ) அமெரிக்கா




கனடா




(4 புள்ளி)

ஆ) அமெரிக்காவின் உற்பத்திப்புள்ளி A

கனடாவின் உற்பத்திப்புள்ளி B (2 புள்ளி)

இ) மேலே வரைபில் காட்டப்பட்டுள்ளது. (2 புள்ளி)

II. 1. தேசியப்பாதுகாப்பு நோக்கம்
2. உள் நாட்டு கூலியினை பாதுகாத்தல்
3. வேலைவாய்ப்பினை பாதுகாக்க
4. வளர்ந்து வரும் கைத்தொழில்களைப் பாதுகாக்க
5. சென்மதி நிலுவையினைப் பாதுகாக்க
6. குவித்தலைத் தடுத்தல்

III. நாணய அதிகாரிகளது எவ்வித கட்டுப்பாடுமின்றி தன்னிச்சையாக நாணங்களின் கேளிவி நிரம்பல் சக்திகளினால் நிர்ணயிக்கப்படும் நாணய மாற்று வீதம் மிதக்கும் நாணயமாற்று வீதமாகும்.

(2 புள்ளி)

மிதக்கும் நணய மாற்றுவீதம் ஒன்றில் நாணய அதிகாரிகள் தலையீட்டு நாணயமாற்றுவீத்தில் ஏற்படும் பெறுமதி தேய்வடைதலையும், பெறுமதி உயர்வடைதலையும் தவிர்ப்பதற்காக நாணயங்களைக் கொள்வனவு செய்தல், விறபனவு செய்தல், என்பவற்றில் ஈடுபடுவதன் மூலம் நாணயமாற்று வீதத்தில் தளம்பலைக்கட்டுப்படுத்துதல் முகாமை செய்யப்பட்ட நாணயமாற்று வீதமாகும்.

(2 புள்ளி)

IV)

| **விடயம்** | **1977** | **2014** |
|---|---|---|
| விவசாய ஏற்றமதிகள் | 79 | 25.2 |
| கைத்தொழில் ஏற்றுமதிகள் | 14 | 74.2 |
| களிப்பொருள் ஏற்றுமதிகள் | 07 | 0.5 |
| ஏனைய ஏற்றுமதிகள் - | | 0.1 |

100 100 (4 புள்ளி)

09.

i. ஒரு நாட்டின் மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது மெய் மொத்த தேசிய உற்பத்தி நீண்ட காலத்தின் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லுதல் பொருளாதார வளர்ச்சியாகும். பண்டங்கள் சேவைகளின் தொகை ரீதியான அதிகரிப்பினை இது குறிக்கும்.

ஒருநாட்டின் மெய் தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பின் நூற்று வீதம் பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும். (4 புள்ளி)

ii. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. பிறப்பின் போது ஆயுள் எதிர்பார்ப்பு வயது வந்தோர் எழுத்தறிவு வீதம் மற்றும் பாடசாலைகளில் அனுமதிக்கப்படும் வீதம் தனி நபர் வருமானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. இலங்கை 2014 இல் 0.750 ஆகவும் 182 நாடுகளில் 73 வது நிலையினைக் கொண்டு உள்ளது (4 புள்ளி)

iii.
- வேலைவாய்ப்பு அதிகரித்தல்
- வறுமை குறைதல், வாழ்க்கைத்தரம் அதிகரித்தல்
- பொதுப்பொருட்களையும் சமூகநலப் பொருட்களையும் வழங்கக்கூடிய அரசின் ஆற்றல் அதிகரித்தல்
- அரச வருமானம் அதிகரிக்கும் சென்மதி நிலுவை முன்னேற்றமடையும்
- விலை உறுதிப்பாடு ஏற்படுத்தல் (ஏதாவது 4ற்கு 4 புள்ளி)

iv.
- நீதியான வருமானப் பங்கீடு
- சமமான பிராந்திய வளர்ச்சி
- சமூக பொருளாதார உட்கட்டமைப்பு விருத்தியடைதல்
- விவசாய உற்பத்திதிறன் அதிகரித்தல்
- வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படல்
- சுற்றாடல் பாதுகாப்பு
  நல்லாட்சி ஏதாவது 4ற்கு 4 புள்ளி)

v.
- அதிகரித்த அரச கடன் சுமை
- மந்தகரமான அரச வருவாய் வளர்ச்சி
- பாதீட்டில் உயர் பற்றாக்குறை
- சென்மதி நிலுவைப்பிரச்சனை
- குறைவான உள்நாட்டு சேமிப்பு
- வினைத்திறனற்ற அரச நிர்வாகம் (4 புள்ளி)

10)

I. மிகக்குறைந்த கலோரிப் பெறுமானத்தை பெற்றுத்தருகின்ற உணவுப்பொருட்களை உள்ளக்கிய அடிப்படைத்தேவைகளைப் பெறுவதற்கு தேவையான வருமானம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடியாத நிலை முழு வறுமையாகும் - வறுமைக்கோட்டின் அடிப்படையில் அளவிடப்படும். 2 புள்ளி)

வருமானப்பகிர்வின் ஏற்றத்தாழ்வு காரணமாக சார்பு வறுமை ஏற்படுகின்றது. உயர்ந்த வருமானத்தினருடன் ஒப்பிடும் போது குறைந்த வருமானத்தினர் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வருமானங்களை அடைய முடியாத நிலை சார்பு வறுமையாகும்.(2 புள்ளி)

II.
1. வறிய சமூகத்திற்கு சாதகமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்
2. வறிய சமூகத்தினரை சக்தி வாய்ந்தவர் ஆக்குதல்
3. வறிய மக்கள் நோக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல்
4. வறிய மக்கள் நோக்கி மாற்றல்களை அதிகரித்தல்
5. வறிய மக்கள் நோக்கி ஏனைய சமூக நலத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(4 புள்ளி)

III. நாடொன்றின் பொருளாதார, சமூக சுற்றாடல் துறைகளுக்கிடையில் சமநிலையான விருத்தி நிலை பேறான பொருளாதார அபிவிருத்தி ஆகும். எதிர்கால பரம்பரையினர் தமது தேவையினை ப்'ர்த்தி செய்து கொள்ள உள்ள ஆற்றலுக்கு தீங்கு ஏற்படாவண்ணம் நிகழ்கால பரம்பரையினர் தமது தேவைகளை ப்'ர்த்தி செய்து கொள்கின்ற அபிவிருத்தி இதுவாகும். இது பின்வரும் மூன்று முக்கிய விடயங்களை உள்ளடக்கியதாகும்.

1. பொருளாதார விருத்தி
2. சமூக விருத்தி
3. சுற்றாடல் பாதுகாப்பு (5 புள்ளி)

IV.
1. குறைந்த பிறப்பு வீதம் குறைந்த இறப்பு வீதம் கொண்ட விரும்பத்தக்க சனத்தொகை வளர்ச்சி ஏற்படுதல்
2. முதியோர் தொகை அதிகரித்தலும் சிறுவர் அளவு குறைதலும்
3. ஊழிய வயதுப்பிரிவினர் குறைவடைதல்
4. பெண்களின் ஆயுள் அதிகரிப்பு மற்றும் முதியவிதவையின் அளவு அதிகரித்தல்

(4 புள்ளி)

V. நாட்டின் ஊழியப்படையினரை 15 வயதும் அதற்கு மேற்பட்டதுமான ஊழிய வயதுச் சனத்தொகையின் நூற்றுவீதமாகக் கூறுதல் ஊழியப்படை பங்குகொள்ளல் வீதமாகும்.

ஊழியப்படை பங்குகொள்ளல்வீதம் = ஊழியப்படை ÷ 15 வயதும் அதற்கு மேற்பட்ட சனத்தொகையும் ×100 (3 புள்ளி)